## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்

*ஆளுநர் பயணத்தின்போது நடந்ததாகக் கூறப்படும் சம்பவம் குறித்து.*

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* பேரவைக்கு ஓர் அறிவிப்பு. நேற்றையதினம் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், உறுப்பினர்கள் திரு. சி. ஞானசேகரன், திரு. எஸ். பன்னீர்செல்வம் மற்றும் திரு. இரா. தாமரைக்கனி ஆகியோர் பேரவை விதி 56-ன் கீழ் ஒரு முன்னறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். அதற்கு நான் அனுமதி மறுத்திருந்தேன். ஆனால் மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அதை எழுப்ப வேண்டுமென்று இங்கு பேரவையில் வலியுறுத்திய காரணத்தாலும், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் அளிக்கத் தயார் எனத் தெரிவித்திருந்ததாலும், அதைத் தொடர்ந்து இங்கு ஏற்பட்ட விவாதத்தின் காரணத்தாலும், அது இன்று எடுத்துக்கொள்ளப்படும் என அறிவித்திருந்தேன். ஆளுநர் நடத்தை பற்றியோ, விவாதத்தை உருவாக்கும் வகையில் அவர் பெயரை இழுத்தோ பேசக் கூடாது என்று பேரவை விதி 92 (vii)-ல் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே ஆளுநர் அவர்களை விவாதத்திற்குரிய பொருளாக ஆக்கக்கூடாது என்பதால் அவர்களுக்கு அனுமதி மறுத்திருந்தேன். ஆனால் நேற்று ஏற்பட்ட விவாதத்தைத் தொடர்ந்து இன்று நான் அனுமதிப்பதாக அறிவித்திருந்தேன். இப்போது மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவரின் முன்னறிவிப்பை, மற்றும் உறுப்பினர்களுடைய முன்னறிவிப்பை ஏற்று அவர்களைப் பேச அனுமதித்தால் ஆளுநர் பற்றியும், அவருடைய நடத்தை பற்றியும் பேச வாய்ப்பு உண்டாகும். எனவே பேரவை விதி 92(vii) தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பெற்றதற்குப் பிறகுதான் இப்பொருள் குறித்து விவாதிக்க முடியும். எனவே அவ்விதியை நிறுத்தி வைக்க வேண்டுமெனில், பேரவை விதிகளின்படி, பேரவைத் தலைவரின் இசைவுடன் ஒரு தீர்மானம் முன்மொழியப்பெற வேண்டும். எனவே இது குறித்து மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் அதற்கான தீர்மானத்தை முன் மொழியலாம். (குறுக்கீடு) திரு.ஜி. பழனிசாமி அவர்களும் கொடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடு)

திரு. ஜி. பழனிசாமி, திண்டிவனம் பற்றி கொடுக்கவில்லை. (குறுக்கீடு) இன்று நீங்கள் கொடுத்தது வேறு. (குறுக்கீடு) அதில் நீங்கள் கொடுக்கவில்லை. இது நேற்றுக் கொடுத்தது.